## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.
## அசல் வழக்கு எண்.246 /2017

2023 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 21–ம் நாள் வியாழக்கிழமை என்பவரது சாட்சியின் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்திய சாட்சியசட்டப் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு T. சோழவேந்தன் B.A.,B.L., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 21.09.2023 | தந்தை/கணவர் பெயர்: | அமிர்தலிங்கம் |
| பெயர்: | சண்முகசுந்தரம் (PW1 chief continuation) | தாலுக்கா: | சீர்காழி |
| கிராமம்: | அல்லிவிளாகம் | சமயம்: | |
| சாதி: | | வயது : | 40/2023 |
| தொழில்: | | | |

<u>**முதல் விசாரணை தொடர்ச்சி :21.09.2023**</u>

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யபப்பட்டு முதன்மை விசாரணை தொடர்ச்சி செய்யப்படுகிறார்.

11.08.2023-ல் தாவா சொத்திற்கு குறுவை சாகுபடி தொகுப்பு திட்டத்தின் கீழ் உரம் பரிந்துரைந்துக்கப்பட்டதற்கான ரசீதுடன் இணையவழி நகலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. (பிரதிவாதி தரப்பில் முத்திரை இல்லையென ஆட்சேபனை செய்யப்பட்டது. ஆட்சேபனையின் பேரில் குறியீடு செய்யப்படுகிறது.) 07.06.2023-ம் தேதிக்கு விசாரணைக்கு ஆஜராக நில அபகரிப்பு தடுப்பு பிரிவு காவல் துறை அனுப்பிய அழைப்பாணையின் சார்வு நகலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. 09.11.2022-ல் தாவா சொத்திற்கு பயிர் காப்பீடு பிரீமியம் செலுத்தியதற்கான இணையவழி ரசீதின் அசலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. 15.02.2023-ல் தாவா சொத்திற்கு பயிர்

காப்பீடு பிரீமியம் செலுத்தியதற்கான இணையவழி ரசீதின் அசலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

மேற்படி ஆவணங்களை ஏற்றுக்கொண்டு தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.